2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 301, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

301—

நீதிமன்றம் அமைத்தல்

*7134—திரு. வி.எஸ். இராஜி:

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, செய்யூரில் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் வணங்குகிறேன். (குறுக்கீடுகள்)

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, செய்யூரில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், புதிய தமிழகம் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தனர்.)

[2015 செப்டம்பர் 21

முற்பகல் 10–05

1. முக்கிய பிரச்சினையை வினாக்கள்—விடைகள் நேரத்திற்கு முன் எழுப்புதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லை, இதையெல்லாம் அனுமதிக்க முடியாது. நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) இல்லை, விதிகளுக்குப் புறம்பாக என்னை செய்யச் சொல்லாதீர்கள். கேள்வி நேரத்தை நடத்த வேண்டும் என்பது நீங்கள் வகுத்துக்கொடுத்த விதிதானே? இப்போது கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) ஒருமனதாக தீர்மானம் வரவேண்டும். அவையிலே ஒருமனதாக தீர்மானம் கொண்டு வந்து நிறைவேறினால்தான் ஒத்திவைக்க முடியும். (குறுக்கீடுகள்) ஒத்திவைக்க முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒருமனதாக கொண்டுவரப்படவில்லை. ஒருமனதாக தீர்மானம் வந்தால்தான் நான் அதுகுறித்துப் பேச முடியும். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன் வினாக்கள்-விடைகள் நேரத்தைத் தளர்த்தி அதை எப்படி எடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) முதலிலேயே அப்படி ஒரு தீர்மானம் வர வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் நான்கு பேர்; எதிர்கட்சியினர், அதற்குரிய தீர்மானத்தினை அவையில் கொண்டுவந்தால், அதுகுறித்து அப்போது பார்க்கலாம். (குறுக்கீடுகள்) அப்படி ஒரு தீர்மானத்தினை நீங்கள் அவையில் கொண்டுவரவில்லை. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தினை ஒத்திவைக்கச் சொல்லி நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை. நீங்கள் திடீரென்று ஒன்றைக் கொடுத்து, கேள்வி நேரத்தினை ஒத்திவைக்க வேண்டும் என்று சொன்னால், என்னால் எப்படி அதை எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) அதெல்லாம் கொண்டுவர முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் அப்படி எடுத்துக்கொள்ள முடியாது. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள். (குறுக்கீடுகள்)

அதெல்லாம் இடையாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தினை ஒத்திவைக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதிகளின்படி கேள்வி நேரத்தினை ஒத்திவைப்பதற்கு எந்த

முகாந்திரமும் இல்லை. (குறுக்கீடுகள்) நான் கேள்வி நேரத்தினை ஒத்திவைக்க முடியாது. மீண்டும், மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். கேள்வி நேரத்தினை ஒத்திவைக்க முடியாது. அவையினுடைய அலுவலை சுமுகமாக நடத்துவதற்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்துவதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இதை எப்படி zero hour என்று எடுத்துக்கொள்வீர்கள்? கேள்வி நேரம் முடிய வேண்டும். (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இனசாரி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், அவையை நடத்தவிடக் கூடாது என்று திட்டமிட்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எந்த விதிப்படி கேட்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் வகுத்துக்கொடுத்த விதியின்படி கேட்கிறீர்களா? இல்லை; புது விதி என்று சொன்னால், நான் எப்படி நிறைவேற்றுவது? (குறுக்கீடுகள்) Zero hour என்றால் எப்படி? (குறுக்கீடுகள்) Zero hour என்றால் கேள்வி நேரம் முடிந்ததற்குப்பின் பார்க்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Zero hour என்பது இப்போது கிடையாது. Zero hour என்பது கட்டாயம் கிடையாது. அது அவைத் தலைவர் அனுமதித்தால்தான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன், இதுவெல்லாம் முறையில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்) என்னை கேள்வி நேரத்தினை நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்) என்னை கேள்வி நேரத்தில் அவையை நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்) எந்த விதிப்படி கேள்வி நேரத்தினை ஒத்திவைக்கச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) எந்த விதியின்படியும் இல்லாமல் நீங்கள் கேள்வி நேரத்தினை ஒத்திவையுங்கள் என்று சொன்னால், எப்படி முடியும்? (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. நான் சொல்வது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கேள்வி நேரத்தினை ஒத்திவைக்க வேண்டுமென்றால், அவையில் ஏற்கெனவே ஒருமனதாகத்

தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும். அப்படி ஒரு தீர்மானம் இல்லாதபோது, கேள்வி நேரத்தினை ஒத்திவைப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. ஆகவே, அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது முறையில்லை. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) அதெல்லாம் முறையில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எந்தவகையில் raise செய்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) எதற்காக எழுந்திருக்கிறீர்கள்? எதுவுமே புரியவில்லை. (குறுக்கீடுகள்) எந்த விதிப்படி நீங்கள் raise செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) நீங்களாகவே எழுந்து நின்று இப்படிக் கேட்டால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் முறையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். நான் கேள்வி நேரத்தினை நடத்தியாக வேண்டும். (குறுக்கீடுகள்)

2. வினாக்கள்-விடைகள்-தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள். கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழினத்தின் விழியே, 1½ கோடி தொண்டர்களின் விழியே, 7 கோடி தமிழர்களின் இதயமே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) 'ஏழையின் சொல் அம்பலம் ஏறும் காலம் வரும்' என்று சொன்னார் அறிஞர் அண்ணா அவர்கள். அதை வரவழைத்துக் காட்டுகின்ற வகையிலே, காணி நிலம் ஊரில் இல்லாத குடியானவர்களையும் சட்டம் இயற்றுகின்ற சட்டமன்றத்திலே கால் பதிக்க வைத்த எங்கள் கருணைக் கடல் அம்மையே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா உங்கள் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமன்கேணி மீனவர் குப்பத்தில் உள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையைக் கருணையுடன் பரிசீலித்து, அங்கு பழுதடைந்திருந்த உயர்மட்டப் பாலத்தினைச் சீரமைக்க பொதுப் பணித் துறைமூலம் 9.97 கோடி

ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதி என்பது புதியதாக மறுசீரமைக்கப்பட்ட தொகுதி. இந்தச் சட்டமன்றத் தொகுதியில் 8 காவல் நிலையங்கள் அமைந்திருக்கின்றன. இந்தத் தொகுதிக்கு ஒரு நடுவர் நீதிமன்றம் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன். பொதுவாக எங்களது சட்டமன்றத் தொகுதியில் இருப்பவர்கள் எல்லாம் 50 கி.மீ. தூரம் சென்றுதான் நீதிமன்றத்திற்குச் செல்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. செய்யூர் சட்டமன்றத் தொகுதி எட்டு காவல் நிலையங்களை எல்லையாகக் கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியில் ஒரு நடுவர் நீதிமன்றம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதித் துறையில் உள்ள வழக்குகளை விரைவாக முடிக்கும் வகையில், புதிய நீதிமன்றங்களையும், நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளையும் தாயுள்ளத்துடன் ஏற்படுத்தி வருகிறார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது 23 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தாலுகாவில் அமைந்துள்ள 5 காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் குற்றவியல் வழக்குகள் மதுராந்தகம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலும், சிவில் வழக்குகள் மதுராந்தகம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் விசாரணை செய்யப்படுகின்றன.

செய்யூரில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திலிருந்து இதுவரை பெறப்படவில்லை. செய்யூரில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக, உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பெறப்படும் பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செய்யூர் தொகுதியில் செய்யூர் தலைமையிடமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு கிடைத்தவுடன், அங்கே நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும் என்று அறிவித்துள்ளதற்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு இதனைக் கொண்டுசென்று, செய்யூரில் நீதிமன்றம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 302, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

302—

மரபுசாரா எரிசக்தி

***31539—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மரபுசாரா எரிசக்தி ஆராய்ச்சி மையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?